**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 230/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திருமதி. சித்ரா** |
| Father's Name/Husband Name: | **திரு. ராமலிங்கம்** |
| Village : | நூத்தப்பூர் |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | 43 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதி எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**
**யில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ப.சா.2 ராமலிங்கம் எனது கணவர். ப.சா.3 பிரசாத் எனது மகன். ப.சா.4 ரம்யா எனது மகள். எதிரிகள் இருவரையும் தெரியும். 1வது எதிரி சீனி எனது கணவரின் அண்ணன். எனது கணவருடன் பிறந்த நபர்கள் என் கணவரையும் சேர்த்து 4 நபர்கள். மேற்படி 4 நபர்களும் நூத்தப்பூரில் ஆளுக்கு ஒன்றரை ஏக்கர் விவசாய நிலத்தை பிரித்துக் கொண்டனர். எனது கொழுந்தனார்கள் தங்கவேலும், கருப்பையாவும் அவர்களுக்குரிய பங்கை எதிரி சீனிக்கு விற்றுவிட்டனர். எங்களுக்கு சொந்தமாக ஒன்றரை ஏக்கர் நிலம் உள்ளது. எங்கள் அனைவருக்கும் பொதுவான கிணற்றில் மின்சார இணைப்பு உள்ளது. எங்களுடைய பாகத்தை எழுதி கையெழுத்து போட்டு கொடுக்கும்படி எதிரி சீனி எங்களிடம் கேட்டார். நாங்கள் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டோம். அதனால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே விரோதம்

ஏற்பட்டது. இது சம்பந்தமாக 1வது எதிரி அடிக்கடி எங்களுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு பெரம்பலூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிரி சீனி மீது நாங்கள் புகார் கொடுத்தோம். மங்களமேடு காவல் நிலையத்தில் சமாதானம் பேசி எங்களிடம் கையெழுத்து வாங்கி கொண்டனர். 2 சென்ட் நிலத்தில் நாங்கள் வீடுகட்டி கொண்டிருந்தோம். கொத்தனாரை அழைத்து கொண்டு பூசிக்கொண்டிருந்தபோது சுமார் 3 வருடங்களுக்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டது. எதிரிகள் சீனி மற்றும் செல்வராஜ் ஆகியோர் உருட்டுக்கட்டையுடன் வந்தனர். எதிரி சீனி தேவிடியா வேலையை நிறுத்திடி என்று சொல்லி உருட்டுக் கட்டையால் என் முதுகில் அடித்தார். எதிரி செல்வராஜ் எனது கன்னத்தில் அறைந்து முடியை பிடித்து இழுத்து என் வயிற்றில் எட்டி உதைத்து கீழே தள்ளிவிட்டார். நான் மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டேன். ஊர் மக்கள் ஏன் அப்பெண்ணை இப்படி அடிக்கிறாய் என்று கேட்ட போது எதிரி சீனி என்னை தேவிடியா உன்னை உருட்டுக் கட்டையால் அடித்து கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். அவ்வாறு எதிரிகள் தாக்கியதில் என் முதுகு, நெஞ்சு மற்றும் வயிற்றில் காயம் ஏற்பட்டது. என்னால் சுவாசிக்க இயலவில்லை. எனது மகன் பிரசாத், மகள் ரம்யாவும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக என்னை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையிலிருந்த போது போலிசார் சம்பவம் குறித்து விசாரித்தனர். போலிசாரிடம் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் நான் போட்டது தான். அந்த **புகார் வாக்குமூலம் அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் கொடுத்த புகார் வாக்குமூலம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிர்தரப்பு வழக்கறிஞர் முன்வரவில்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.